## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை கனிய மணல் லிமிடட் இன் (''கம்பனி'') 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய பொழிப்பாக்கிய முக்கிமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2024 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து கம்பனியின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் அதனுடன் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கம்பனி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கம்பனியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கம்பனியின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கம்பனியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கம்பனி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

என்னால் தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டு விடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- கணக்கீட்டு கொள்கையின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களின் பொருத்தமான தன்மையை மதிப்பீடு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமையின் காரணமாக கம்பனியின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்கு வருதல், பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான்

முடிவுக்கு வந்தால் நிதிக்கூற்றுக்களில் அது சம்பந்தமான வெளிப்படுத்தல்களுக்கு எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்த வேண்டியதுடன் அந்த வெளிப்படுத்தல்கள் பேணியவையாக காணப்படாதிருந்ததால் எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைத்தல் வேண்டும். எவ்வாறாயினும் எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத் தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பித்தல் தொடர்பில் பார்க்கப்படும் கம்பனியின் பணிகளை தொடர்ச்சியான மதிப்பாய்வு செய்வதற்கு இணங்கக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் கட்டமைப்பு நடைமுறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான முறையில் பேணப்படுகின்றதா,

- ஏதேனும் பொருத்தமான எழுத்துமூல சட்டமொன்றிற்கு அல்லது கம்பனியின் கட்டுப்பாட்டு திட்டத்தினால் வெளியிடப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடொன்றிற்கு இணங்க கம்பனியின் செயற்பட்டுள்ளதாக,

- தனது அதிகாரங்கள், கடமைகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா,

- வளங்கள் சிக்கனமாகவும், வினைதிறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லையினுள் மற்றும் உரிய சட்டங்கள் மற்றும் விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதாக,

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காமை

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை கணக்கீட்டுத் நியமம் 7 இன் பிரகாரம் காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட வேணடிய போதிலும், அவ்வாறு இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு காணப்படுகின்றன. | | |
| (அ) கம்பனியினால் ஜனதா எஸ்டேட் அபிவிருத்திச் சபைக்கு வழங்கப்பட்டிருந்த கடன் தொகையிலிருந்து 2024 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற ரூபா 1.25 மில்லியன், காசுப்பாய்ச்சல் கூற்றின் முதலீட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | இந்தக் கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகிறேன். | காலப்பகுதியில் பணமாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல்வாங்கல்களை காசுப்பாய்ச்சல் கூற்றில் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டிய | -மேற்படி- | -மேற்படி- |

மீதியில் 2024 ஆம் ஆண்டில் செலுத்தப்பட்ட ரூபா 12.8 மில்லியன் காசுப்பாய்ச்சல் கூற்றின் செயற்பாட்டுச் செயற்பாடுகளின் கீழ் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.5.2 கணக்கீட்டு குறைப்பாடுகள்

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2024 ஒக்தோபர் 15 தொடக்கம் 2025 ஒக்தோபர் 15 வரை 30000 கியூப் கனியமணல் அகழ்வு செய்வதற்காக ரூபா 15 மில்லியன் கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களத்திற்குச் செலுத்தி அனுமதிப்பத்திரம் பெறப்பட்டிருந்ததுடன், 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாராக அதன் கீழ் 3179 கியூப் கனிமணல் அகழ்வு செய்யப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், எஞ்சிய 26821 கியூப் கனிமணலுக்கான ரூபா 13.41 மில்லியன் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை முற்பணக் கொடுப்பனவாக கணக்கிட வேண்டியிருந்த போதிலும், அது ரூபா 15.70 மில்லியன் கணக்கிடப்பட்டதன் காரணமாக ஆண்டின் இலாபம் ரூபா 2.29 மில்லியன் இனால் அதிகமாகக் காண்பிக்கப்பட்டிருந்தது. | 2024.12.31 ஆம் திகதி வரையான ரூபா 2.29 மில்லியன் முற்பணக் கொடுப்பனவு தொகையை, 2025 ஆம் ஆண்டில் கடந்த கால இலாபத்துடன் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றோம். | முற்பணக் கொடுப்பனவுகளின் பெறுமதியை சரியாக இனங்கண்டு, அவற்றுக்கான சீராக்கல்களை மேற்கொள்ளப்பட வேண்டும் |

### 1.5.3 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் வரி இணக்கப்பாடாக ரூபா 140.80 மில்லியனை முந்தைய ஆண்டின் இலாபத்திலிருந்து குறைத்துக் காட்டுவதற்கான சான்றுகளும், காசுப்பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முந்தைய இலாபத்திற்கு மேற்கொள்ளப்பட்ட சீராக்கல்களின் கீழ் முந்தைய ஆண்டுச் சீராக்கல்களாக சேர்க்கப்பட்ட ரூபா 138.17 மில்லியனை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தினால், குறித்த சீராக்கல்களின் துல்லியத்தன்மை கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்படவில்லை. | வருமான வரி ஒதுக்கீட்டுக் கணக்கின் பதிவு சரியானது என்பதுடன், முந்தைய ஆண்டுச் சீராக்கல் கணக்கிற்குத் தேவையான சீராக்கல்களை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பொது நாட்குறிப்பு வவுச்சர் தயாரிக்கும் போது, பதில் கடமையாற்றும் பிரதிப் பொது முகாமையாளரினால் தயாரிக்கப்படும் வவுச்சர்களை பரிசோதித்து கையொப்பமிடுவதற்கு அவருக்கு மேல்நிலை அதிகாரி எவரும் இல்லாத காரணத்தினால், பிரதிப் பொது முகாமையாளரின் (நிதி) கையொப்பத்தை மாத்திரம் இடவேண்டி நிலை | பொது நாட்குறிப்புப் பதிவுகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான முறையான சான்றுகளைச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதுடன், சான்றுகள் உள்ள பெறுமதிகள் மாத்திரமே கணக்குகளின் ஊடாகச் சீர்செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | ஏற்பட்டது. எதிர்காலத்தில் இதற்கான முறையான நடைமுறை தயாரிக்கப்படும். |

**1.6 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**1.6.1 பெறவேண்டியவைகள்**

| | கணக்கீட்டு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இல்லமனைட், ரூட்டைல் மற்றும் காந்தத்தன்மையற்ற கனியுப்புக்கள் (NMT) ஆகியவற்றுக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 2.52 மில்லியன் அரசகட்டண செலவு, ஐந்து ஆண்டுகளுக்கும் மேலாக முற்பணக் கொடுப்பனவுகளின் கீழ் காட்டப்பட்டிருந்த போதிலும், குறித்த மீதியைத் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு மேலதிகமாகச் செலுத்தப்பட்ட அரசகட்டணத்தை (Royalty) மீண்டும் அறவிடுவதற்குப் பல சந்தர்ப்பங்களில் அறிவிக்கப்பட்டிருந்ததுடன், குறித்த உற்பத்திப் பொருட்கள் விற்பனை செய்யப்படும் சந்தர்ப்பத்தில் செலுத்த வேண்டிய அரசகட்டணத்துடன் இந்த முற்கூட்டியே செலுத்தப்பட்ட அரசகட்டணத்தை ஈடுசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. | மேலதிகமாக செலுத்தப்பட்ட அரசக்கட்டணத்தை தீர்ப்பணவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | 2006 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 63.71 மில்லியன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிலுவையைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி சேர்க்கப்பட்ட வரி கணக்கின் மீதியை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் பரிசோதித்துத் தீர்ப்பதற்குத் தேவையான நடவடிக்கைகள் விரைவாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. | பெற வேண்டிய பெறுமதி சேர்க்கப்பட்ட வரி மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 செலுத்த வேண்டியவைகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2023 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்குரிய ரூபா 11.13 மில்லியன் நிறுத்தி வைத்தற் மீதியைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | செலுத்த வேண்டிய நிறுத்தி வைத்தற பணத்தைத் (Retention Money) தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | நிறுத்தி வைத்தல் மீதியை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | புல்மோட்டை தொழிற்சாலை | குறித்த பணி 2012 ஆம் ஆண்டளவில் | அங்கீகாரம் |

| | | | |
|---|---|---|---|
| | வளாகத்தின் உட்புற வீதித் தொகுதியை நிர்மாணித்த ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டியதாக 2011 ஆம் ஆண்டு முதல் நிலுவையிலுள்ள ரூபா 5.34 மில்லியன் மற்றும் 2021-2023 காலப்பகுதிக்குரிய ரூபா 6.06 மில்லியன் பெறுமதியான 68 நானாவித கடன் கொடுநர் மீதிகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பூர்த்தி செய்யப்பட்ட போதிலும், வீதி நிர்மாணத்தின் போது டென்டரில் எதிர்பார்க்கப்பட்ட அடர்த்தி மற்றும் அளவை விட அதிகமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, குறித்த கொடுப்பனவை மேற்கொள்வதற்கு அக்காலத்தில் முறையான அங்கீகாரம் பெறப்படாததால், அக்கொடுப்பனவுகளைப் பூர்த்தி செய்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. குறித்த மீதிகளுக்காக மீதி உறுதிப்படுத்தல் கடிதங்கள் சம்பந்தப்பட்ட விநியோகஸ்தர்களுக்கு அனுப்பப்பட்டன. ஒரு விநியோகஸ்தர் மாத்திரமே பதிலளித்திருந்தார். அதன்படி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் அவற்றை கணக்குகளிலிருந்து நீக்குவதற்குத் தயாராக இருந்த சந்தர்ப்பத்திலேயே, அந்தப் பட்டியலிலிருந்த ஒரு விநியோகஸ்தருக்குக் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த ஆண்டின் பிற்பகுதியில் பணிப்பாளர் சபைக்கூட்டம் நடைபெறாததால் இது தொடர்பாக முடிவெடுக்க முடியாமல் போனது. எவ்வாறாயினும், இவ்வருடத்தில் மீண்டும் ஒருமுறை மீதிகளை உறுதிப்படுத்திய பின்னர், அவற்றை கணக்கிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | வழங்கப்பட்ட பின்னரே கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், ஏனைய மீதித் தொகைகள் உறுதிப்படுத்தப்பட்ட பின்னரே தீர்க்கப்பட வேண்டும். |
| (இ) | 2014/2015 வரி மதிப்பீட்டு ஆண்டிற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்குச் செலுத்த வேண்டியிருந்த ரூபா 21.52 மில்லியன் வருமான வரிக்கு எதிராக மேன்முறையீடு (Appeal) செய்வதற்காக, வரி மதியுரை கம்பனிக்கு செலுத்த வேண்டிய ரூபா 2.10 மில்லியனில் 50 சதவீதத்தை ஏற்கனவே செலுத்தியிருந்ததுடன், மதியுரை சேவை பூர்த்தியடைந்த நிலையில் எஞ்சியிருந்த ரூபா 1.05 மில்லியன் 2019 ஆம் ஆண்டு முதல் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மேன்முறையீட்டிற்காக நாங்கள் வைப்புச் செய்திருந்த ரூபா 5.3 மில்லியன் பிணைப்பண மீளக் கிடைக்கும் வரை KPMG நிறுவனத்திற்குரிய கட்டணங்களை விடுவிப்பது தாமதப்படுத்தப்பட்டது.<br><br>2025.08.11 ஆம் திகதி இப்பணம் கிடைத்துள்ளதால், எதிர்வரும் பணிப்பாளர் சபையின் அனுமதியுடன் அதற்கான கொடுப்பனவை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும். | வரி மதியுரை கட்டணம் விரைவாக தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2004 மார்ச் 30 திகதிய பீஈ/ஜிஓ/சீஓ/14/02 ஆம் இலக்க திறைச்சேரி செயலாளரின் கடிதம் | | | |
| | (i) குறித்த கடிதத்தின் மூலம் ஒருவருக்கு மாதமொன்றுக்கு ரூபா 500 வருகைக்கான கொடுப்பனவாக அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின்படி அது அவ்வப்போது ரூபா 3,000 வரை அதிகரிக்கப்பட்டு, திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2024 ஆம் ஆண்டில் பிரதான அலுவலக ஊழியர்களுக்காக ரூபா 3.20 மில்லியனும், புல்மோட்டை தொழிற்சாலை ஊழியர்களுக்காக ரூபா 14.43 மில்லியனும் செலுத்தப்பட்டிருந்தது. | அமைச்சரவைப் பத்திர இலக்கம் 24/0553/601/040 மற்றும் 2024.03.18 திகதிய அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் அரச துறையின் கொடுப்பனவுகளை அதிகரிக்க முடியாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளதால், தற்போது வழங்கப்படும் உணவு மற்றும் வருகைக்கான கொடுப்பனவுகளை அதிகரிக்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு இந்தச் சந்தர்ப்பத்தில் உடன்பட முடியாது என முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார் | திறைசேரி அங்கீகாரம் பெறப்படாமல் வழங்கப்பட்ட கொடுப்பனவுகள் மீண்டும் அறவிடப்பட வேண்டும். |
| | (ii) குறித்த கடிதத்தின் மூலம் ஒருவருக்கான உணவுக்கான கொடுப்பனவாக நாளொன்றுக்கு ரூபா 35 அங்கீகரிக்கப்பட்டிருந்த போதிலும், திறைசேரி அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் பணிப்பாளர் சபைத் தீர்மானங்களின்படி அது அவ்வப்போது ரூபா 200 வரை அதிகரிக்கப்பட்டு, 2024 ஆம் ஆண்டில் | -மேற்படி- | -மேற்படி- |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பிரதான அலுவலக ஊழியர்களுக்காக ரூபா 4.26 மில்லியனும், புல்மோட்டை தொழிற்சாலை ஊழியர்களுக்காக ரூபா 25.05 மில்லியனும் ரூபாவும் உணவுக்கான கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | 2023 மே 16 திகதிய 1/2021 (i) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | நட்டங்கள் அல்லது கிடைக்க வேண்டியவைகளை கணக்கிலிருந்து நீக்கும் போது, தேவையான சுற்றறிக்கை விதிகளைப் பூர்த்தி செய்து, கணக்காய்வுக் குழுவின் பரிந்துரையுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெற வேண்டியிருந்த போதிலும், 2024 ஆம் ஆண்டில் ரூபா 37.48 மில்லியன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி நிலுவையை கணக்கிலிருந்து நீக்கும் போது அத்தகைய அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் ரூபா 37.48 மில்லியன் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி தொகையானது, உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் வெட் கணக்காய்வின் பின்னர் தலைவரின் அங்கீகாரத்திற்கு உட்பட்டு கணக்கிலிருந்து நீக்கப்பட்டது. எவ்வாறாயினும், இது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தைப் பெறுவதற்காக சமர்ப்பிக்கப்படும். | சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பிரகாரம் கணக்காய்வு குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் பணிப்பாளர் சபை அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| (இ) | 2022 சனவரி 14 திகதிய 1/2015(ii) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை மற்றும் 2024 பெப்ரவரி 28 திகதிய 01/2024 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 11.3 ஆம் பந்தி | தலைவரின் உத்தியோகபூர்வ கடமைகளை நிறைவேற்றுவதற்கு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவு போதுமானதாக இல்லாத சந்தர்ப்பங்களில், மேலதிக எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு வரிசை அமைச்சின் செயலாளரின் அங்கீகாரம் பெறப்பட வேண்டும். இருப்பினும், அத்தகைய அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமல் 2022 செப்தெம்பர் மாதம் முதல் 2024 ஓகஸ்ட் மாதம் வரை ரூபா 3.85 மில்லியன் மேலதிக எரிபொருள் செலவுத் தொகை தலைவருக்கு மீளச் செலுத்தப்பட்டிருந்தது. | 2022 ஒக்தோபர் மாதம் முதல் 2023 மார்ச் மாதம் வரை பெற்றுக்கொள்ளப்பட்ட மேலதிக எரிபொருளுக்காக சுற்றறிக்கையின்படி அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. அதற்கான இணைப்புகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. 2023 ஏப்ரல் மற்றும் மே மாதங்களுக்குரிய அங்கீகாரத்திற்காக பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்ட போதிலும், விரிவான அறிக்கைகளை மீண்டும் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 2024 சனவரி முதல் யூலை வரையான மேலதிக எரிபொருள் நுகர்வு தொடர்பான அறிக்கை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்ட போதிலும், அதனைப் பணிப்பாளர் சபையின் பரிந்துரைகளுடன் | அனுமதி இன்றி வரம்பிற்கு அப்பாற்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகளை வழங்கக்கூடாது என்பதுடன், அவ்வாறு வழங்கிய தரப்பினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டது. அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும், அந்தச் சந்தர்ப்பத்தில் நிறுவனத்தில் ஒரு பணிப்பாளர் சபை நிறுவப்பட்டிருக்காத காரணத்தினால், பணிப்பாளர் சபையின் பரிந்துரையைப் பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. | |
| (ஈ) | 2014 நவம்பர் 12 திகதிய 25/2014 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கையின் 07 ஆம் பந்தி | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமல், கம்பனியினால் புல்மோட்டை தொழிற்சாலைக்காக 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் 114 ஊழியர்கள் தற்காலிகத் தொழிலாளர்களாக பணியமர்த்தப்பட்டிருந்தனர். தற்போது இவ்வாறு பணியமர்த்தப்பட்ட தற்காலிக ஊழியர்களில் 97 பேர் நிறுவனத்தின் விரல் அடையாள இயந்திரத்தில் தமது வருகையைப் பதிவு செய்கின்ற போதிலும், 17 ஊழியர்களுக்கு மாத்திரமே நிறுவனம் சம்பளம் வழங்கி வருகின்றது. இதற்கமைய, 80 தற்காலிக ஊழியர்கள் கடந்த 12 மாதங்களாக எவ்வித சம்பளமும் பெறாமல் தொழிற்சாலை வளாகத்தின் விரல் அடையாள இயந்திரத்தில் தமது வருகையையும் வெளியேற்றத்தையும் பதிவு செய்ய வாய்ப்பளிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்கான காரணங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | குறித்த நியமனங்கள் தொடர்பாக இலஞ்ச அல்லது ஊழல் புலனாய்வு ஆணைக்குழுவிற்கு செய்யப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில், அது தொடர்பான விசாரணைகள் நடைபெற்று வருகின்றன என்பதை அறியத்தருகின்றேன். நிறுவனத்தில் நிலவும் 41 தொழிலாளர் பதவி வெற்றிடங்களுக்கு இவர்களை நியமிப்பதற்கும், புல்மோட்டை தொழிற்சாலையின் அங்கீகரிக்கப்பட்ட உத்தியோகத்தர் குழாமில் அவசியமற்ற சில பதவி வெற்றிடங்களை இனங்காண்பதற்கும், மேலும் சில பதவிகளை இரத்துச் செய்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன், அது தொடர்பான அனுமதிப்பத்திரங்கள் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி, அங்கு வழங்கப்படும் அங்கீகாரங்களுக்கு அமைய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | ஊழியர் ஆட்சேர்ப்பு சுற்றறிக்கை விதிகளின்படி மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதுடன், முறையான அனுமதி இன்றி தற்காலிக ஊழியர்களைப் பணியமர்த்தியது தொடர்பாக விசாரணை நடத்தி, அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மேலும், சம்பளம் பெறாத நபர்கள் தொழிற்சாலை வளாகத்திற்குள் நுழைந்து விரல் அடையாளங்களைப் பதிவு செய்வது தொடர்பில் நிர்வாகத்திற்குப் பொறுப்பான அதிகாரிகளே பொறுப்புக்கூற வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 77.06 மில்லியன் நட்டமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 4,050.72 மில்லியன் ஆகும். அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 4,127.79 மில்லியன் வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. கடந்த ஆண்டுகளில் கம்பனியின் பிரதான உற்பத்திகளின் விற்பனையை போதுமான அளவு மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காத போதிலும், கடந்த ஆண்டில் உப-உற்பத்தியான சிர்கான் செறிவூட்டல் (Zircon Concentrate) விற்பனை மூலம் ரூபா 4,226.94 மில்லியன் வருமானம் ஈட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், மீளாய்வாண்டில் பிரதான உற்பத்திகளும் உப-உற்பத்திகளும் போதுமான அளவு விற்பனை செய்யப்படாதமையே, மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 4,286.43 மில்லியன் இனால் குறைவடைந்தமைக்கு பிரதான காரணமாக அமைந்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2011 செப்தெம்பர் 19 ஆம் திகதிய அமைச்சரவைத் தீர்மான இலக்கம் அமப/11/2068/553/018/1 இன் பிரகாரம், இலங்கை பீங்கான் தொழில் கூட்டுத்தாபன ஊழியர்களுக்கான ஓய்வூதிய இழப்பீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக ரூபா 500 மில்லியன் பணத்தை 2012 ஆம் ஆண்டில் வரையறுக்கப்பட்ட அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு கம்பனி வழங்கியிருந்தது. இப்பணத்தை அறவிடுவதற்கு எதிராக 2017 ஆம் ஆண்டில் அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்திற்கு எதிராக கம்பனியினால் கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் CHC/569/2017/MR வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருந்த போதிலும், 2018 மே 22 ஆம் திகதியிட்ட அமைச்சரவைத் தீர்மான இலக்கம் அமப/18/நானாவித(019) இன் பிரகாரம், அரச நிறுவனங்களுக்கு இடையே பிணக்குகள் காணப்படுமாயின் அவற்றைத் தீர்க்கும் நோக்கில் ஏனைய அரச நிறுவனங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதைத் தவிர்க்குமாறு பணிக்கப்பட்டிருந்த காரணமாக, வரையறுக்கப்பட்ட அரச வளங்கள் முகாமைத்துவ கூட்டுத்தாபனத்தை கலைக்கும் பணிகள் நிறைவடையும் வரை இந்த வழக்கை ஒத்திவைப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை | இது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்தில் நடைபெற்ற கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுறுத்தல்களின்படி, கொழும்பு வர்த்தக மேல் நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த வழக்கு இலக்கம் CHC/569/17MR ஆனது 2024 ஆம் ஆண்டு முடிவடைவதற்கு முன்னர் ஒத்திவைக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br>மேலும், அரச வளங்கள் முகாமைத்வுத கூட்டுத்தாபனத்தை கலைக்கும் பணிகள் எமது நிறுவனத்தின் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்டதுடன், அது பொது திறைசேரியினால் மேற்கொள்ளப்பட வேண்டிய ஒரு பணியாகும். | திறைசேரியுடன் கலந்துரையாடி இப்பிரச்சினை யைத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், வழங்கப்பட்ட கடன் தொகை மற்றும் வட்டியை மீள அறவிட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்குமாறு பொது நிறுவனங்கள் மற்றும் மறுசீரமைப்பு மேலதிக செயலாளரின் 2024 ஒக்தோபர் 04 ஆம் திகதிய கடித இலக்கம் MI/RST/09/04/07 (IV) மூலம் கம்பனிக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. இலங்கை பீங்கான் தொழில் கூட்டுத்தாபன சபையின் நிதி அறிக்கைகளின்படி ரூபா 387 மில்லியன் மாத்திரமே லங்கா மினரல் சேண்ட்ஸ் லிமிடெட் நிறுவனத்திற்குச் செலுத்தப்பட வேண்டும் எனக் காட்டப்பட்டிருந்த போதிலும், 2022 ஆம் ஆண்டில் குறித்த கடன் தொகை மற்றும் அதற்குரிய வட்டியான ரூபா 517.42 மில்லியன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் கணக்குப் புத்தகங்களிலிருந்து நீக்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. | | |
| (ஆ) | பொது முயற்சிகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட, கம்பனியின் ஊழியர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவுத் திட்டத்தின்படி, மாதாந்த இல்லமனைட் உற்பத்தியின் அடிப்படையில் ஊக்குவிப்பு கொடுப்பனவுகள் வழங்கப்பட வேண்டும் என்பதுடன், அதன்கீழ் குறைந்தபட்ச மாதாந்த இல்லமனைட் உற்பத்தி 2800 மெற்றிக் தொன்களாக இருக்க வேண்டும். மேலும், ஊக்குவிப்பு கொடுப்பனவுத் திட்டத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டால், அது தொடர்பாக பொது முயற்சிகள் திணைக்களத்திடம் அனுமதி பெறப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் முதல் 2025 மே 31 வரை கம்பனியினால் குறைந்தபட்ச மாதாந்த இல்லமனைட் உற்பத்தி மட்டத்தை அடைய முடியாமல் போன நிலையில், மேற்கூறிய அங்கீகாரத்திற்கு முரணாக ரூபா 36.87 மில்லியன் உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவாக வழங்கப்பட்டிருந்தது. | 2024 ஒக்தோபர் மாதம் முதல் கனியமணலை உற்பத்தி செய்து களஞ்சியப்படுத்த முடியாமல் போனமையினால், குறித்த மாதங்களுக்குரிய உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவை ஊழியர்களுக்கு வழங்காததால் அவர்கள் மத்தியில் ஒருவித அமைதியற்ற சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. அவர்கள் விடுத்த கோரிக்கைகளைக் கருத்திற்கொண்டு இது தொடர்பான விடயங்கள் பொது முயற்சிகள் திணைக்களத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டன. அதன்படி, 2024 ஒக்தோபர் மாதம் முதல் 2025 மார்ச் மாதம் வரையிலான காலப்பகுதியினுள் உள்ளாரான உற்பத்தி நிலுவையை), 2025 ஆம் ஆண்டின் மொத்த உள்ளவாரான உற்பத்தியிலிருந்து குறைத்துக் கொள்ளும் நிபந்தனைக்கு உட்பட்டு, மாதாந்த உற்பத்தி ஊக்குவிப்பு கொடுப்பனவை வழங்குவதற்கு பொது முயற்சிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட 2025.04.25 திகதிய PED/I/LMS/3/11(iv) இலக்கக் கடிதத்தின் மூலம் உரிய அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | வழங்கப்பட்ட அங்கீகாரத்திற்கு முரணாகச் செலுத்தப்பட்ட ஊக்குவிப்பு கொடுப்பனவை, அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து மீள அறவிடப்பட வேண்டும் என்பதுடன், எதிர்காலத்தில் இத்தகைய கொடுப்பனவுகள் வழங்கப்படுவதை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2024 ஆம் ஆண்டில் 1380 மெற்றிக் தொன் ரூட்டைல் மற்றும் 100 மெற்றிக் தொன் சிர்கான் ஆகியவற்றுக்காகப் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திடமிருந்து ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளும் போது, அரசகட்டணமாக கொள்வனவாளரிடமிருந்து அறவிடப்பட்ட தொகையை விட மேலதிகமாக ரூபா 4.53 மில்லியன் கம்பனியின் செலவில் பணியகத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது | நிறுவனத்திற்கு கொள்வனவாளர்களிடமிருந்து விற்பனைக்குரிய பணம் கிடைப்பது, களஞ்சியசாலையிலிருந்து விடுவிக்கப்படும் அடிப்படையில் மற்றும் அரசகட்டணம் உள்ளடங்கலாக (Ex-Works + Royalty) ஆகும். ஆனால், புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு நாங்கள் அரசகட்டணத்தைச் செலுத்த வேண்டியது, பொருட்கள் கப்பலில் ஏற்றப்படும் வரையிலான (FOB) அடிப்படையில் அரசகட்டணத்தைக் கணிப்பிட்டு அதன் பணப் பெறுமதியாகும்.<br>மேலும், எமது கணக்குகளில் பணம் வரவு வைக்கப்படும் போது, இலங்கை வங்கியின் அந்நியச் செலாவணி விகிதத்தின்படி அமெரிக்க டொலருக்கான கொள்வனவு விலைக்குரிய பெறுமதியே எமக்குக் கிடைப்பதுடன், நாங்கள் அரசகட்டணத்தைச் செலுத்த வேண்டியது இலங்கை மத்திய வங்கியின் அந்நியச் செலாவணி விகிதத்தின்படி அமெரிக்க டொலருக்கான விற்பனை விலைக்குரிய பெறுமதியாகும். இக்காரணத்தினால், கிடைக்கின்ற பணத்தை விட அதிகமான பெறுமதிக்கு அரசகட்டணத்தைச் செலுத்த வேண்டிய நிலை எமது நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ளது. இது தொடர்பாக நாங்கள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திற்கு எழுத்துப்பூர்வமாக அறிவித்துள்ளதுடன், இது குறித்த மேலதிக பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. | அரசகட்டணமாக செலுத்தப்படும் முழுத் தொகையையும் கொள்வனவாளர் களிடமிருந்து அறவிடுவதற்கான ஒரு வேலைத் திட்டத்தை அறிமுகப்படுத்த வேண்டும் என்பதுடன், சேகரிக்கப்பட்ட தொகையை விட மேலதிகமாகச் செலுத்தப்பட்ட அரசகட்டணத்தை கொள்வனவாளர் களிடமிருந்து மீள அறவிட வேண்டும். |
| (ஈ) | கனியமணலுக்கான பெறுமதி கூட்டல் திட்டத்திற்குத் தேவையான மூலப்பொருட்களைத் தொடர்ச்சியாக வழங்குவதற்காக, கொக்கிளாயில் புதிய தொழிற்சாலையொன்றை நிறுவும் நோக்கில் 2013 ஆம் ஆண்டில் ரூபா 2.25 மில்லியன் செலவில் 17.67 ஹெக்டேயர் காணி கொள்வனவு செய்யப்பட்டதுடன், உத்தேசிக்கப்பட்ட தொழிற்சாலையின் பணிகளுக்காக 2015 ஆம் ஆண்டில் 117 ஊழியர்களும் பணியமர்த்தப்பட்டிருந்தனர்.<br>எவ்வாறாயினும், கணக்காய்வுத் | நிறுவனத்தில் அவ்வப்போது ஏற்பட்ட நிர்வாக மாற்றங்களினால் கொக்கிளாய் தொழிற்சாலையை ஆரம்பிப்பது தாமதமடைந்தது. எவ்வாறாயினும், 2024 ஆம் ஆண்டின் முற்பகுதியில் தொழிற்சாலையை நிர்மாணிப்பதற்கான திட்ட அறிக்கையைத் தயாரிப்பதற்கு ஆலோசகர் ஒருவரை நியமிக்க டெண்டர் கோரப்பட்டது. இதற்காக ஆலோசனைப் பெறுகை குழுவொன்று நியமிக்கப்பட்டு, டெண்டர் கோரப்பட்டதன் பின்னர் கிடைக்கப்பெற்ற ஏலங்கள் குறித்த குழுவிற்கு | தொடர்புடைய தரப்பினருடன் கலந்துரையாடி, தொழிற்சாலையின் பணிகளை முறையாக ஆரம்பிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை விரைவாக எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | திகதியான 2025 யூன் 30 வரை, அதாவது 10 ஆண்டுகளுக்கும் மேலான காலப்பகுதி கடந்த போதிலும், தொழிற்சாலையின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2024 திசெம்பர் 31 வரையில் இத்திட்டத்திற்காக ரூபா 43.71 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | பரிந்துரைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டன. இருப்பினும், அதன் பின்னர் ஏற்பட்ட நிர்வாக மாற்றங்களினால் குறித்த குழுவின் உறுப்பினர்களும் விலகினர். இச்சூழ்நிலையினால் குறித்த பணி ஸ்தம்பிதமடைந்துள்ளதுடன், புதிய ஆலோசனைப் கொள்முதல் குழுவொன்றை நியமித்து இப்பணியை முன்னெடுத்துச் செல்ல வேண்டியுள்ளது. எவ்வாறாயினும், எதிர்காலத்தில் மிகவும் முறையான நடைமுறையைப் பின்பற்றி இத்திட்டத்தின் பணிகளை நிறுவனம் ஆரம்பிக்கும். | |
| (உ) | 2024 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் கம்பனியிடம் 187,951 மெற்றிக் தொன் கனியமணல் கையிருப்பு இருந்தபோதிலும், அந்த ஆண்டில் 26,744.1 மெற்றிக் தொன் உற்பத்தி செய்யப்பட்டு 1,490 மெற்றிக் தொன் மாத்திரமே விற்பனை செய்யப்பட்டிருந்தது. கம்பனியின் கனிமணல் விற்பனையானது 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை முறையே 81137, 64380, 32071 மற்றும் 1490 மெற்றிக் தொன்களாகத் தொடர்ந்து வீழ்ச்சியடைந்து வரும் நிலை அவதானிக்கப்பட்டதுடன், விற்பனையை அதிகரிப்பதற்கான முறையான வேலைத்திட்டம் எதுவும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, தொழிற்சாலையின் களஞ்சிய கொள்ளளவை விட இருப்பு அதிகரித்தமையால் கம்பனி பாரிய சிக்கலை எதிர்நோக்கியிருந்ததுடன், 15000 மெற்றிக் தொன் கனியமணலை மாதமொன்றுக்கு ரூபா 1.5 மில்லியன் கட்டணத்தைச் செலுத்தி 2024 மார்ச் மாதம் முதல் திருகோணமலை துறைமுகக் களஞ்சியசாலையில் களஞ்சியப்படுத்தியிருந்தது. | 2021 ஆம் ஆண்டு முதல் 2024 ஆம் ஆண்டு வரை விற்பனை வருமானம் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்தமைக்கு விற்பனை நடைமுறையில் காணப்பட்ட பலவீனமே காரணமாகும். எனினும், தற்போது இவ்விற்பனை நடைமுறையை மாற்றுவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதால், இவ்வருடம் முதல் முன்னெடுக்கப்படும் விற்பனை டெண்டர்களுக்கு அந்தப் புதிய நடைமுறையைப் பின்பற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் திரவத்தன்மை தொடர்பான சிக்கல் நீங்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இல்லமனைட் உற்பத்தி நடவடிக்கைகளைத் தடையின்றி முன்னெடுத்துச் செல்வதற்காக 15000 மெற்றிக் தொன் இல்லமனைட்டை திருகோணமலை துறைமுக வளாகத்தில் களஞ்சியப்படுத்த தீர்மானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், அந்த 15000 மெற்றிக் தொன் இல்லமனைட்டையும் எதிர்பார்த்தபடி விற்பனை செய்ய முடியாமல் போனதனால், திருகோணமலை துறைமுகக் களஞ்சியசாலைக்குத் தொடர்ந்தும் மாதாந்தக் கட்டணங்களைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. | கனிமணல் விற்பனையை மேம்படுத்துவதற்காக கம்பனியினால் முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டு இப்பிரச்சினை விரைவாகத் தீர்க்கப்பட வேண்டும் என்பதுடன், வருடாந்த விற்பனை மற்றும் களஞ்சியசாலைகளின் கொள்ளளவிற்கு ஏற்ப வருடாந்த உற்பத்தியைக் கட்டுப்படுத்த வேண்டும். |
| (ஊ) | முன்னாள் தலைவரும் பிரதான பொறியியலாளரும் (அகழ்வு மற்றும் பதனிடல்) 2024 ஏப்ரல் 15 முதல் 2024 ஏப்ரல் 20 வரை சீனாவின் ஹைக்கோ நகரில் நடைபெற்ற “2024 உலகளாவிய சிர்கான் மாநாட்டில்” | இது தொடர்பாக 2025.07.22 திகதிய MI/CIA/04/08/33 ஆம் இலக்க தொழில்துறை அமைச்சின் உள்ளக கணக்காய்வாளரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்காய்வுப் பரிசோதனையில் குறிப்பிடப்பட்டுள்ள | முறையான விசாரணையை நடத்தி, நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை |

| | | |
|---|---|---|
| கலந்துகொண்டிருந்தனர். இம்மாநாட்டை ஏற்பாடு செய்த வெளிநாட்டு நிறுவனத்தினால் வழங்கப்பட்டிருந்த விலை ரூபா 2.19 மில்லியன் ஆக இருந்தபோதிலும், இதற்காக கம்பனியினால் ரூபா 3.2 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது.<br>தலைவரால் 2024 ஏப்ரல் 04 ஆம் திகதி தொழில்துறை அமைச்சின் செயலாளருக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின்படி, இவ்வெளிநாட்டுப் பயணத்தின் முக்கிய நோக்கங்களாக இல்லமனைட் உற்பத்தியின் தரத்தை மேம்படுத்தும் திட்டத்தை 2024 ஆம் ஆண்டில் நிறைவு செய்தல், முகவர்களின் எவ்விதத் தடையுமின்றி கம்பனியின் விற்பனை விலையை அதிகரித்தல் மற்றும் கொள்வனவாளர்களின் எதிர்பார்ப்புகளை ஆராய்ந்து அதற்குரிய சீர்செய்கைகளை மேற்கொண்டு நிறுவனத்தின் இலாபத்தன்மையை அதிகரித்தல் என்பன குறிப்பிடப்பட்டிருந்தன.<br>எவ்வாறாயினும், எவ்வித புதிய வெளிநாட்டு கொள்வனவாளர்களும் நிறுவனத்திற்கு அறிமுகப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன், 2024 ஆம் ஆண்டில் கம்பனியின் விற்பனையானது எதிர்பார்க்கப்பட்ட விற்பனையில் 1 சதவீதமாக மாத்திரமே காணப்பட்டது.<br>இப்பயணத்தில் கலந்துகொண்ட தலைவரின் பதவிக்காலம் 2024 செப்தெம்பர் மாதத்துடன் நிறைவடைந்திருந்ததுடன், பிரதான பொறியியலாளர் (அகழ்வு மற்றும் பதனிடல்) 2024 திசெம்பர் 19 ஆம் திகதி முதல் கம்பனியின் சேவைக்கு சமூகமளிக்கவில்லை. அதன்படி, இவ்வெளிநாட்டுப் பயணத்திற்காகச் செய்யப்பட்ட செலவிலிருந்து நிறுவனத்திற்கு எதிர்பார்க்கப்பட்ட நன்மைகள் எதுவும் கிடைக்கப்பெறவில்லை. | பரிந்துரைகளுக்கு அமைய தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதை அறியத்தருகின்றேன். | அதற்குப் பொறுப்பான தரப்பினரிடமிருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் |

### 3.2 செயற்பாட்டுச் செயற்திறனின்மைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018-2028 வரையான காலப்பகுதிக்குரிய புல்மோட்டை, பொடுவாக்கட்டு, தெவிக்கல் ஆகிய பிரதேசங்களில் மூல மணல் அகழ்வு செய்வதற்காக கம்பனியிடம் 03 செல்லுபடியாகும் அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் இருந்தபோதிலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் புல்மோட்டை அகழ்வு அனுமதிப்பத்திரத்தின் மூலம் மாத்திரமே அகழ்வுப் பணிகளை மேற்கொள்ள கம்பனி நடவடிக்கை எடுத்திருந்தது. 2024 ஆம் ஆண்டில் மூல மணல் உள்ளீடுகளில் காணப்படும் கழிவு மணல் (Tailing) சதவீதம் 37 சதவீதத்திலிருந்து 64 சதவீதம் வரை அதிகரித்த மட்டத்தில் காணப்படுவதாக கம்பனியின் ஆய்வக அறிக்கைகளின் மூலம் அவதானிக்கப்பட்டதுடன், நீண்டகாலமாக புல்மோட்டை கடற்கரையோரம் சார்ந்த பகுதிகளில் மூல மணல் அகழ்வு செய்யப்பட்டதன் காரணமாக, அக் கடற்கரையோர மூல மணலில் உள்ள கனியுப்புக்களின் செறிவானது இவ்வாறு படிப்படியாகக் குறைவடைந்து வருகின்றது. | கம்பனியிடம் 2018 முதல் 2028 வரை செல்லுபடியாகும் 03 அனுமதிப்பத்திரங்கள் இருந்தபோதிலும், 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் புல்மோட்டை வலயத்திற்கான ஒரு அனுமதிப்பத்திரத்தின் கீழ் மாத்திரமே அகழ்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. புல்மோட்டை கடற்கரையில் நீண்டகாலமாக கனியமணல் அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படுவதால், அங்குள்ள கனியுப்புக்களின் சதவீதம் குறைவடைந்துள்ளது. 2024 ஆம் ஆண்டளவில் கம்பனியின் ஆய்வக அறிக்கைகளின்படி, மூல மணலில் (Raw Sand) காணப்படும் கழிவு மணல் (Tailings) சதவீதம் அதிகரித்துள்ளது. புல்மோட்டை வலயத்தில் கனிமணல் அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பதற்குப் GSMB நிறுவனத்தின் ஊடாக விதிக்கப்பட்டுள்ள விதிமுறைகளின் கீழ் அகழ்வுகளைச் செய்வது மிகவும் கடினமாக உள்ளது. பொடுவாக்கட்டு மற்றும் தெவிக்கல் ஆகிய பகுதிகளில் கனியுப்புக்களின் சதவீதம் மிகக் குறைந்த மட்டத்திலேயே காணப்படுகின்றது. | கனியமணல் அகழ்வுப் பணிகள் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் விதிமுறைகளின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டும் |
| (ஆ) | அடுத்த 20 ஆண்டுகளுக்கான அகழ்வுத் திட்டத்தைச் சமர்ப்பிக்காமை மற்றும் தற்போதுள்ள அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுகின்றமை ஆகிய காரணங்களைக் காட்டி, புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் கம்பனி விண்ணப்பித்திருந்த 7 புதிய ஆய்வு அனுமதிப்பத்திர விண்ணப்பங்கள் 2023 மே 25 ஆம் திகதி நிராகரிக்கப்பட்டமையினால், மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் எவ்வித ஆய்வு அனுமதிப்பத்திரங்களும் கம்பனியிடம் இருக்கவில்லை. | புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2023.01.03 திகதிய கடிதத்தின் மூலம், குறித்த 20 ஆண்டுகால அகழ்வுத் திட்டத்தைச் சமர்ப்பிப்பதற்காக 6 மாத கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, குறித்த திட்டம் 2023.06.29 திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது. இருப்பினும், அறிக்கை சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அதாவது 2023.04.26 அன்று (அறிக்கை சமர்ப்பிக்க இன்னும் ஒரு மாதத்திற்கும் மேலாக கால அவகாசம் இருந்த நிலையில் பணியகத்தினால்) இந்தப் புதிய ஆய்வு அனுமதிப்பத்திரங்களுக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தின் 2023.01.03 | அகழ்வு அனுமதிப்பத்திரங்கள் குறைவாகப் பயன்படுத்தப்படுவதைத் தவிர்க்க வேண்டும் என்பதுடன், கனிமப் படிவுகளை நீண்டகால அகழ்வுப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திகதிய கடிதத்தின்படி, ஆய்வுப் பணிகள் நிறைவடைந்துள்ள பகுதிகளில் மேலும் ஆய்வு அனுமதிப்பத்திரங்களை நீடிப்பது அவசியமில்லை எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. அடுத்த 25 ஆண்டுகாலப் பகுதிக்கான புதிய அகழ்வுத் திட்டமானது நிறுவனத்தின் ஆய்வுப் பகுதிகளை உள்ளடக்கும் வகையில் தயாரிக்கப்பட்டு 2025.07.31 அன்று மீண்டும் புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அதன்படி, குறித்த கனிமப் படிவுகளை நீண்டகால அகழ்வுப் பணிகளுக்காக ஒதுக்கீடு செய்வதற்குரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | |

### 3.3 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிறுவனத்தில் மனிதவளத் தகவல் அமைப்பொன்று (HRIS) நிறுவுவதற்கான ஒப்பந்தம் 2024 செப்தெம்பர் 20 அன்று ரூபா 2.19 மில்லியன் இற்கு தனியார் நிறுவனமொன்றிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன், ஒப்பந்தத்தின்படி இந்த மென்பொருளை நிறுவும் பணிகள் 60 நாட்களுக்குள் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. அதற்கமைய, புல்மோட்டை தொழிற்சாலை வளாகத்தில் மாத்திரம் மென்பொருள் நிறுவப்பட்டிருந்த போதிலும், 2025 யூன் 30 ஆம் திகதியளவிலும் பிரதான அலுவலகத்தில் இந்த மென்பொருளை நிறுவும் பணி ஆரம்பக் கட்டத்திலேயே காணப்பட்டது. எவ்வாறாயினும், 2024 செப்தெம்பர் 25 ஆம் திகதியளவில் ஒப்பந்தத் தொகையில் 90 சதவீதமான ரூபா 1.97 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. | தற்போது சம்பள மாற்றங்களை சரிசெய்வதற்குரிய பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன், அது தொடர்பான தகவல்கள் அந்த நிறுவனத்தின் மென்பொருள் வடிவமைப்பாளரிடம் வழங்கப்பட வேண்டியுள்ளது.<br>அத்துடன், பிரதான அலுவலகத்தில் இதற்காக நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர் பல்வேறு காரணங்களினால் பலமுறை புல்மோட்டை தொழிற்சாலைக்கு இடமாற்றம் செய்ய வேண்டியிருந்தது. இதுவே பிரதான அலுவலகத்தின் பணிகள் நடைபெறாமல் போனமைக்கான காரணமாக அமைந்தது. | பிரதான அலுவலகத்திற்குரிய மென்பொருளை நிறுவும் பணிகளைப் பூர்த்தி செய்து, அதனைப் பயன்பாட்டிற்கு எடுக்க வேண்டும் |

## 3.4 விளைவற்ற சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கிழக்குக் கடற்கரையோரத்திலுள்ள 30 சதவீதத்திற்கும் குறைவான கனியுப்புக்களைக் கொண்ட பகுதிகளில் கனிமணல் அகழ்வு செய்யும் நோக்கில் 2022 ஆம் ஆண்டில் ரூபா 328.88 மில்லியன் இற்கு கொள்வனவு செய்யப்பட்ட இரண்டு நடமாடும் தொழிற்சாலைகளில், ஒரு தொழிற்சாலை 2024 ஆம் ஆண்டில் புல்மோட்டை தொழிற்சாலை வளாகத்தில் நிறுவப்பட்டிருந்ததுடன், அதற்காக ரூபா 8.63 மில்லியன் செலவில் மின்சார விநியோகத் தொகுதியொன்றும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த தொழிற்சாலையானது 2025 யூன் 30 ஆம் திகதி வரை உற்பத்தி நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படாமல் ஒரு செயலற்ற சொத்தாகவே காணப்பட்டது. மேலும், ரூபா 159.35 மில்லியன் பெறுமதியான மற்றைய நடமாடும் தொழிற்சாலையானது நிறுவப்படாமல், அதன் பாகங்கள் பாதுகாப்பற்ற முறையில் புல்மோட்டை தொழிற்சாலை வளாகத்தின் ஆங்காங்கே கைவிடப்பட்டிருந்தன. | இயந்திரங்களை நிறுவுவதற்காக பொடுவாக்கட்டு மற்றும் தெவிக்கல் பகுதிகளில் இரண்டு பொருத்தமான காணிகளைக் கண்டறிய முயற்சி செய்தபோதிலும், அது கடினமாக இருந்தமையால் ஒரு தொழிற்சாலை புல்மோட்டை தொழிற்சாலை வளாகத்தினுள் நிறுவப்பட்டது. அதன்படி, 2023 நவம்பர் முதல் 2024 நவம்பர் வரையான காலப்பகுதியில் சுமார் 4134 மெற்றிக் தொன் மூல மணல் feed செய்யப்பட்டு, சுமார் 852 மெற்றிக் தொன் செறிவூட்டப்பட்ட கனிமணல் பெற்றுக்கொள்ளப்பட்டது. அதேவேளை, எஞ்சியிருந்த மற்றைய தொழிற்சாலையைப் பொடுவாக்கட்டு பகுதியில் நிறுவுவதற்காக குச்சவெளி பிரதேச செயலாளரினால் பொருத்தமான காணியொன்று எமது நிறுவனத்திற்கு வழங்கப்பட்டது. இருப்பினும், அப்பகுதியைச் சேர்ந்த ஒருவர் அந்தக்காணி தமக்குச் சொந்தமானது எனக் கூறி நீதிமன்ற நடவடிக்கைகளை மேற்கொண்டதால், அந்தச் செயல்முறையும் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | இயந்திரங்களை நிறுவுவதற்குத் தேவையான ஆரம்பகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்காமல் இயந்திரங்களைக் கொள்வனவு செய்து, அவற்றைச் செயலற்ற நிலையிலும் பாகங்களைப் பாதுகாப்பற்ற முறையிலும் ஆங்காங்கே கைவிட்டுள்ளமை தொடர்பாக விசாரணை நடத்தி, அதற்குப் பொறுப்பான அதிகாரிகளுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | சிர்கான் தொழிற்சாலையின் எரிபொருள் நுகர்வை 50 சதவீதத்தால் குறைக்கும் நோக்கில் ரூபா 45.12 மில்லியன் இற்கு 2016 யூன் 30 அன்று உலர்த்தும் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், அதனைச் செயற்படுத்தத் தேவையான நவீனமயமாக்கல் பணிகளுக்காக 2024 ஆம் ஆண்டில் ரூபா 954,000 செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், குறித்த இயந்திரத்தைச் செயற்பாட்டு | உலர்த்தும் இயந்திரத்தை கொள்வனவு செய்ததன் பின்னர், அதனைப் பயன்பாட்டு நிலைக்குக் கொண்டுவருவதில் உள்நாட்டு முகவர் தோல்வியடைந்ததுடன், ஏற்பட்ட சிக்கலைத் தீர்ப்பதற்குப் பாரிய முயற்சி எடுக்கப்பட்டது. எனினும், பின்னர் அவர்கள் அதிகளவிலான தொகையைக் கோரினர். அத்தொகையைச் செலுத்துவதற்கு நிறுவனம் அங்கீகாரம் வழங்காததால் அவர்கள் அப் பணியிலிருந்து விலகிக்கொண்டனர். இந்தச் சூழ்நிலையில், மற்றுமொரு உள்நாட்டு நிறுவனத்தின் உதவியைப் | இந்த இயந்திரத்தைக் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுத்த பொறுப்பான தரப்பினரை இனங்கண்டு, ஏற்பட்டுள்ள நட்டத்தை மீள அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | நிலைக்குக் கொண்டுவர கம்பனி தவறியிருந்ததுடன், அதற்கமைய ரூபா 46.07 மில்லியன் ஒரு வீணான செலவாக மாறியிருந்தது. | பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. அதன்பின்னர், இரண்டு உள்நாட்டு நிறுவனங்களுக்குப் பணம் செலுத்தி, இயந்திரத்தைச் செயற்பாட்டு நிலைக்குக் கொண்டுவருவதற்குப் பாரிய முயற்சி எடுக்கப்பட்டது. இருப்பினும், தொழில்நுட்பக் கோளாறுகளைச் சரிசெய்ய அவர்களால் முடியாத காரணத்தினால் அந்தப் பணி பாதியிலேயே நிறுத்தப்பட்டது. | வேண்டும். |
| (இ) | 2018 ஆம் ஆண்டில் ரூபா 7.82 மில்லியன் இற்கு கொள்வனவு செய்யப்பட்ட கடல் நீர் இறைக்கும் நிலையத்திற்கான மோட்டார் இயந்திரத்திற்காக, 2024 திசெம்பர் வரை ரூபா 13.36 மில்லியன் பெறுமதியான மேலதிக உதிரிப்பாகங்களும் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எவ்வாறாயினும், குறித்த மோட்டார் கடல் நீர் விநியோகத் தொகுதியிலிருந்து அகற்றப்பட்டு, 2025 யூன் 12 ஆம் திகதியளவிலும் எவ்வித பயன்பாடுமின்றி களஞ்சியசாலையில் வைக்கப்பட்டிருந்தது. | புளொக் - ஏ தொழிற்சாலையின் செயற்பாட்டிற்காகக் கடல் நீரைப் பெற்றுக்கொள்வதற்கு கொள்வனவு செய்யப்பட்ட Submersible Solutions Pump, கடல் கொந்தளிப்பான நேரங்களிலும் தொடர்ச்சியாக 24 மணித்தியாலங்களும் பயன்படுத்தப்பட்டமையால், அதன் உதிரிப்பாகங்கள் தேய்வடைந்ததன் காரணமாக திருத்த வேலைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்தத் திருத்தப் பணிகளின் பின்னர், அது பயன்படுத்துவதற்கு மிகவும் பொருத்தமான நிலையில் உள்ளது. இருப்பினும், அந்த Submersible Solutions Pump delivery line முற்றாக உக்கமடைந்துள்ளதாலும் கடற்பரப்பின் அடியில் Submersible ஐ பொருத்தும் brackets உக்கமடைந்துள்ளதாலும், அதனைப் பயன்படுத்த முடியாமல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. | தொழில்நுட்ப உத்தியோகத்தர் ஒருவருடனான ஆய்வுச் சபையின் பரிந்துரைகளின் அடிப்படையில் பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |